# கடுகன்னாவ நகர சபை

## கண்டி மாவட்டம்

------------------------------------

1. நிதிக் கூற்றுக்கள்

------------------------------

1.1 நிதிக் கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

----------------------------------------------------

மீளாய்வாண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2014 மார்ச் 25 திகதியும் முன்னைய ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2013 மார்ச் 25 திகதியும் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டிற்கான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2014 திசெம்பர் 09 திகதி சபையின் தலைவருக்கு அனுப்பப்பட்டிருந்தது.

1.2 அபிப்பிராயம்

-------------------

இவ்வறிக்கையின் 1.3 பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள முக்கிய விடயங்கள் ஏற்படுத்தும் தாக்கங்கள் தவிர, நிதிக் கூற்றுக்களின் 2013 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறான கடுகன்னாவ நகர சபையின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அவற்றின் நிதிச் செயற்பாடுகளும் காசுப் பாய்ச்சலும் பொதுவாக ஏற்றுக் கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமை ஒன்றினை வெளிப்படுத்துகின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்.

1.3 நிதிக் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

------------------------------------------------------------

1.3.1 கணக்கீட்டு குறைபாடுகள்

--------------------------------------

நகர சபைக்கு சொந்தமான 21 காணி துண்டுகள் மற்றும் 17 கட்டடங்களின் பெறுமதியை பதிவு செய்து, கணக்கீடு செய்திருக்கவில்லை.

1.3.2 இணக்கஞ் செய்யப்படாத கட்டுப்பாட்டு கணக்குகள்

----------------------------------------------------------------------------

கணக்கு விடயம் ஒன்றுடன் தொடர்புடைய கட்டுப்பாட்டு கணக்கின் பிரகாரம், மீதி ரூபா 5,575,136 ஆகக் காணப்பட்டதுடன், பட்டோலையின் பிரகாரம், மீதி ரூபா 5,530,120 ஆக காணப்பட்டமையால், ரூபா 45,016 இற்கான இணக்கமின்மை காணப்பட்டது.

1.3.3 பெற வேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

---

(அ) பெற வேண்டிய கணக்குகள்

---

2013 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு பெற வேண்டிய கணக்குகளின் கூட்டுப் பெறுமதி ரூபா 6,757,742 ஆக காணப்பட்டதுடன், அவற்றில் 01 வருடத்தை மிகைத்திருந்த கணக்கு மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 612,026 ஆகும்.

(ஆ) செலுத்த வேண்டிய கணக்குகள்

---

2013 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு 01 வருட காலத்தை விஞ்சியிருந்த செலுத்த வேண்டிய 10 கணக்கு மீதிகளின் கூட்டத் தொகை ரூபா 2,289,409 ஆக காணப்பட்டதுடன் அவற்றில் ரூபா 180,548 தொகை 03 வருடங்களை விஞ்சிய 02 கணக்கு மீதிகளின் கூட்டுத்தொகையாகும்.

1.3.4 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணக்கமின்மை

---

பின்வரும் இணக்கமின்மை சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டன.

| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் தொடர்பு | இணக்கமின்மைகள் |
|---|---|
| (அ) நகர சபை கட்டளை சட்டத்தின் 225 அதிகாரம் 127 இ(1) | சபையின் அதிகாரப் பிரதேசத்தில் வீடு ஒன்றிற்கு ஆபத்தான நிலையில் அமைந்துள்ள 40 -75 வரையான உயரமுடைய 05 மகோகணி மரங்களை அகற்றும் படி அறிவிக்கப்பட்டு 04 வருடங்களை விட கூடுதலான காலம் கடந்திருந்த போதும் அவற்றை அகற்றியிருக்கவில்லை. |
| (ஆ) இலங்கை குடியரசின் நிதிப் பிரமானங்கள் கோவை 571 | 02 வருடங்ளை கடந்துள்ள ரூபா 257,912 தொகை பெறுமதியான 68 வைப்புக்கள் தொடர்பாக நிதி பிரமானங்களின் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. |

2 நிதி மீளாய்வு

---

2.1 நிதி விளைவுகள்

---

சமர்பிக்கப்பட்டிருந்த நிதிக் கூற்றுக்களின் பிரகாரம் 2013 திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த ஆண்டின் போது சபையின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 9,744,810 ஆக காணப்பட்டதுடன் அதற்கு நேரொப்ப முன்னைய ஆண்டின் போது மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 11,380,695 ஆக காணப்பட்டமையால், நிதி விளைவுகளில் ரூபா 1,635,885 இற்கான குறைவு ஒன்று காணப்பட்டது.

2.2 பகுப்பாய்வு ரீதியான நிதி மீளாய்வு

-----------------------------------------------------

மீளாய்வாண்டிற்கான மிகையினை முன்னைய ஆண்டிற்கான மிகையுடன் ஒப்பீடு செய்யும் போது ரூபா 7,114,194 இற்காக குறைவு ஒன்று அவதானிக்கப்பட்டது அத்துடன் அது தொடர்பாக 03 வருமான விடயங்களில் குறைவு மற்றும் 03 செலவு விடயங்களில் அதிகரித்தல் அடிப்படை காரணமாக அமைந்துள்ளது.

2.3 தொழிற்படு மூலதன மூகாமைத்துவம்

-----------------------------------------------------------

மீளாய்வாண்டிற்கான தொழிற்படு மூலதனத்தின் வித்தியாசம் 1.36:1 ஆக காணப்பட்டதுடன் முன்னைய ஆண்டிற்கான அந்த விகிதாசாரம் 1.77:1 ஆக காணப்பட்டமையால் நகர சபை ஒன்றில் காணப்பட வேண்டிய உச்ச மட்ட தொழிற்படு மூலதனம் காணப்படவில்லை என அவதானிக்கப்பட்டது மேலும் ஒப்பீட்டு மொத்த நடைமுறை சொத்துக்களில் நூற்றுக்கு 35 அதாவது ரூபா 11 மில்லியன் நிர்மான வேலைகள் மற்றும் பலவித கடன்பட்டோர்கள் காணப்பட்டதுடன் மொத்த நடைமுறை பொறுப்புக்களில் நூற்றுக்கு 86 ஆக ரூபா 20 மில்லியன் நிர்மான வேலைகள் மற்றும் கடன் கொடுத்தோர் அடஙகியிருந்தது.

2.4 வருமான நிருவாகம்

-----------------------------

(அ) வீதவரி

----------

மீளாய்வாண்டு ஆரம்பத்தில் உள்ளவாறு நிலுவை வீதவரி வருமான ரூபா 3,510,665 ஆக காணப்பட்டது அத்துடன் வருட இறுதியில் நிலுவை ரூபா 4,887,754 தொகை வரை அதிகரித்திருந்தது.

(ஆ) கடை வாடகை

---------------------

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(i) மீளாய்வாண்டின் இறுதியில் காணப்பட்ட ரூபா 102,970 இற்கான நிலுவை வாடகை வருமானத்தை நீண்ட காலமாக அறவிடப்படாமல் காணப்படும் மீதி ரூபா 68,770 ஆகும்.

(ii) 2008 ஆண்டு முதல் கடுகன்னாவ வாராந்த சந்தை நிலுவை கட்டணத்தில் அறவிடப்பட வேண்டிய ரூபா 252,856 தொகையினை அறவீடு செய்வதற்கு சபையினால் முறையான செயற்பாடு ஒன்று மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(iii) உடன்படிக்கைக்கு மாற்றமாய் சபைக்கு சொந்தமான கடைகள் இடை வாடகைக்கு கொடுக்கப்பட்டிருந்தது.

(இ) நீதி மன்றத் தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணம்

----------------------------------------------------------------------------------

மத்திய மாகாண சபையில் இருந்து 2013 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு நீதி மன்றத் தண்டப் பணம் ரூபா 211,399 மற்றும் முத்திரை கட்டணம் ரூபா 943,550 தொகை ஒன்று கிடைக்க வேண்டியிருந்தது.

(ஈ) விளம்பர அறிவித்தல் பலகைக் கட்டணம்

----------------------------------------------------------------

2012 திசெம்பர் 07 திகதி இலக்கம் 1788 கொண்ட இலங்கை குடியரசின் வர்த்தமானி அறிவித்தலின் ஏற்பாடுகளின் பிரகாரம் அதிகார பிரதேசத்தில் பொருத்தப்பட்டுள்ள 47 நிரந்தர அறிவித்தல் பலகைகள் தொடர்பாக ரூபா 194,500 இற்கான கட்டணம் அறவிடப்பட்டிருக்கவில்லை.

(உ) சுற்றாடல் அனுமதிப் பத்திர கட்டணம்

-----------------------------------------------------------

1988 இன் 56 இலக்க மற்றும் 2000 இன் 58 ஆம் இலக்க சட்டங்களின் மூலம் திருத்தப்பட்டுள்ள 1980 இன் 47 ஆம் இலக்க தேசிய சுற்றாடல் சார் சட்டத்தின் மற்றும் 2008 ஜனவரி 25 திகதிய இலக்கம் 1533/16 கொண்ட அதி விஷேட வர்த்தமானி அறிவித்தலின் பிரகாரம் சுற்றாடல் அனுமதிப்பத்திரம் வழங்கப்பட வேண்டிய 15 வர்த்தக நிலையங்கள் தொடர்பாக அனுமதிப் பத்திரம் வழங்கப்படாமையால் ரூபா 110,000 இற்கான தொகையொன்றினை சபை இழந்துள்ளது.

3 செயற்பாட்டு மீளாய்வு

--------------------------------

முகாமைத்துவ திறமையின்மை

-----------------------------------------------

(அ) இடமாற்றம் பெற்றுச் சென்றுள்ள 16 ஊழியர்களிடம் அறவிடப் பட வேண்டிய நிலுவை கடன் மீதியாகிய ரூபா 935,503 இற்கான தொகையின் அறவீடு செய்வதற்காக சபையினால் முறையான நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(ஆ) மீளாய்வாண்டிற்கான பண்டக் கணிப்பீட்டின் போது 16 விடயங்களில் 65 அலகுகளில் குறைவும் 11 விடயங்களில் 23 அலகுகளில் மிகையும் வெளிப்படுத்தப்பட்டுள்ளது.

(இ) 104 நிர்மாண வேலைகளுக்கான மூலதன செலவுகளாக சபை ரூபா 22,344,033 தொகை ஏற்பாடுகள் கிடைத்திருந்த போதும் அவற்றில் ரூபா 8,744,900 பெறுமதியான 85 நிர்மாண வேலைகளே பூர்த்தி செய்யப்பட்டிருந்தன.

4 கணக்கு நடவடிக்கை தன்மையும் நல்லாட்சியும்

------------------------------------------------------------------------

4.1 கூட்டிணைப்புத் திட்டம்

---------------------------------

மீளாய்வாண்டிற்ன் போது சபையினால் கூட்டிணைப்புத் திட்டமொன்று தயாரித்திருக்கவில்லை.

4.2 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு

-----------------------------------------------------------------

சபையில் மீளாய்வாணடின் போது கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு நடைபெற்றிருக்கவில்லை.

4.3 அகக் கணக்காய்வு

-----------------------------

மீளாய்வாண்டின் போது சபையில் போதியளவு அகக் கணக்காய்வு ஒன்று மேற் கொள்ளப்பட்டிருக்கவில்லை.

5 முறைகள் மற்றும் கட்டுபாடுகள்

----------------------------------------------

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டு பகுதிகள் தொடர்பாக விஷேட கவனம் தேவைப்படுகிறது.

(அ) கணக்கீடு

(ஆ) வருமான நிருவாகம்

(இ) கடன் பட்டோர் மற்றும் கடன் கொடுத்தோர் கட்டுப்பாடு

(ஈ) ஒப்பந்த நிருவாகம்